சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 02.01.2026 SC. 17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உமா மகேஸ்வரி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW13 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் கரூர் மருத்துவ கல்லூரியில் இணை பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். நான் தேனி அரசு மருத்துவமனை மருத்துவகல்லூரியில் பணி மருத்துவராக பணி புரிந்த போது கடந்த 04.05.2020 ம் தேதியன்று தங்கராஜ் த/பெ கல்யானி தேவர், W10 சுப்ரமணிய கோவில் தெரு, கம்பத்தை சேர்ந்தவர், 04.05.2020 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் வயிற்றில் கத்திக்குத்து காயத்துடன் கம்பம் அரசு மருத்துவனையில் முதலில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்த போது ஆழமான ஊடுருவல் வயிற்றில் குத்துக்காயம் ஏற்பட்டு குடல் வெளியே சரிந்த நிலையில் இருந்தது. அவருக்கு உடனடியாக மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் காய சான்றிதழ் வழங்கியுள்ளேன். நான் மருத்துவ கருத்துரை வழங்கியுள்ளேன். அது அ.சா.ஆ-10 ஆகும். வழக்கு சமந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தங்கராசுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவ கருத்துரை வழங்கியுள்ளேன். விபத்து பதிவேட்டு நகலில் கூர்மையான ஆயுதம் என சொல்லப்பட்டுள்ளது. கத்தி என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கத்திகுத்து காயம் என குறிப்பிட்டு மருத்துவ அகராதியில் உள்ளதா என்றால் காயம் பட்ட நபர் கூறியததை நான் எழுதியுள்ளேன். ஆனால், ஆழமான ஊடுருவல் காயம் என்பதை குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய மருத்துவ கருத்துரையில் காயத்தின் ஆழத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளேன். அது உயிருக்கு ஆபத்தானது என சான்றிதழில் சொல்லவில்லை. என்னுடைய கருத்துரை மருத்துவ ரீதியான கருத்துரை என்றால் சரிதான். குடலில் காயம் இருந்ததா என்றால் ஆனால் மருத்துவ கருத்துரையில் சொல்லமாட்டோம். குடலில் காயம்

இல்லை என்றும், இருந்தால் நான் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளரிடம் குடலில் காயம் இருந்தது பற்றி சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் ஆய்வாளரிடம் குடலில் காயம் இருந்ததா என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது குடலில் காயம் இருந்தது என சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு கூர்மையான ஆயுதத்தில ஒரு நபர் விழுந்தால் நான் காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள கொடுங்காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது, ஆனால், என்னுடைய அனுபவத்தில் அவ்வாறு ஏற்பட வாய்ப்பு இல்லை. நான் இ.த.ச.பிரிவு 320ன் கீழ் கொடுங்காயம் என காயச்சான்றிதழ் என வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

ஓம்.M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.